DINA KURAL-14-AUG-2011

ஈஷா அறக்கட்டளையின் நிறுவனர் சத்குரு அவர்களின் சுதந்திர தின வாழ்த்து செய்தி

கோவை, ஆக. 14

நம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 64 வருடங்கள் ஆகிவிட்டன. சுமார் இரண்டு தலைமுறை களுக்கும் மேல் முடிந்து விட்டன. இருப்பினும் இந்த நாட்டில் அடிப்படையாக நடந்திருக்க வேண்டிய பல செயல்கள் கூட இன்னமும் நடக்காமல் உள்ளன. எனவே நம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில், இந்த நாட்டை முன்னேற்றப் பாதை யில் அழைத்துச் செல்லும் உறுதியை தற்போதைய தலைமுறை எடுக்க வேண்டும்.

சுதந்திரம் என்பது வெறுமனே கொடி ஏற்றி, கோஷமிடுவதில் இல்லை. இந்த சுதந்திரம் போன தலைமுறை நமக்கு கொடுத்துச் சென்றுள்ள ஓர் அன்பளிப்பு இதனை நாம் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

சுதந்திரத்தின் அடிப்படையே நாமே நம் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்கிறோம் என்பதில் தான் இருக்கிறது. நம் நாட்டை சுதந்திரமான நாடு என ஏன் நாம் சொல்கிறோம். என்றால் நம் வாழ்க்கை, நம் எதிர்காலம், வருங்கால தலைமுறைக்கான வாய்ப்பு ஆகியவற்றை நாமே உருவாக்க முடியும் என்கிற காரணத்தால்தான் எனவே நாம் அனைவரும் நம் நன்மைக்காகவும் நம் நாட்டின்

முன்னேற்றத்திற்காகவும் வரும் தலைமுறையின் நன்மைக் காவும் இதனை நோக்கி உறுதியுடன் செயல்பட வேண் டும். அதுவே என்னுடைய ஆசையும் அருளும். இந்த சுதந்திர தினத்தில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.